தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படையின் கோவை நான்காவது பட்டாலியன் சார்பில் நடைபெறும் பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் தினந்தோறும் மாலை நடைபெற்று வருகிறது. ஏராளமான மாணவ மாணவிகள் தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களின் பாராட்டுகளை அள்ளிச் சென்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கு. இராமசாமி அவர்களின் முன்னிலையில் சிறந்த பயிற்சி மாணவருக்கான ஒரு மாணவரும் ஒரு மாணவியும் சிறந்த பயிற்சி வீ ரராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சிகளை நான்காவது பட்டாலியன் படை தளபதி கர்னல் கே. ஜே. எம். ராய் மற்றும் லெப்டினன்ட் கர்னல் ஆண்டனி ஜோசப் தலைமை தாங்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் கு.மு. செல்லமுத்து அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்